**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**
**Deposition of witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**CC No. 115 /2022**

**Deposition of witness for PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சிங்காரம் | **வயது** | : | 65 |
| **தகப்பனார் பெயர்** | : | செல்லன் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | வேம்பங்குடி கிழக்கு | **தொழில்** | : | விவசாயம் |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Examiner of this court in accordance with the provisions of Act X of 1873.
**(A2,A3 present. A1 absent. Petition filed u/s. 317 Cr.P.C. Counsel Present)(Date: 10.02.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhaar Card of Witness verified.**

**சாட்சியானர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

**1.** நான் அறந்தாங்கி வேம்பங்குடி கிழக்கு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10.08.2022 அன்று நான் எனது சொந்த வேலையாக கீரமங்கலம் காவல்நிலையம் சென்றபோது போலிசார் என்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 10.08.2022 அன்று எதிரிகள் எனது தோட்டத்தில் உள்ள காப்பர் ஒயரை திருடிச்சென்றதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால்

**சரியல்ல. எதிரிகளுடன் நான் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகளும் நானும் சமாதானமாக சென்றுவிட்டதால் புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு எதிராக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**
**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u> இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி.(பொறுப்பு).